## சுற்றுலா அபிவிருத்தி நிதியம் – 2017

சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------------

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 24(3) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி வரியை முகாமைத்துவப்படுத்துவதற்கும் நிர்வகிப் பதற்குமான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாண இலக்கம் 169(2) | காசோலை தேறுவதற்கு முன் சேவை நிறுவனம் சேவை வழங்கியதன் காரணமாக 07 காசோலைகளுக்குரிய ரூபா 143,505 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |

**2.3 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

நிர்வாகச் செலவினங்களை செலுத்துவதற்காக 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் வழங்காதிருக்கும் போது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது நிர்வாகச் செலவினமாக ரூபா 7,765,924 தொகையொன்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

---------------------------

## 3.1 நிதி விளைவுகள்

----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய வருமானம் ரூபா 3,933 மில்லியனாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 3,644 மில்லியன் ஆனமையால் வருமானத்தில் ரூபா 289 மில்லியன் தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 265 மில்லியனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------

## 4.1 செயலாற்றல்

--------------------------

2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் சேகரிக்கப்படும் குடியகல்வு வரிப் பணத்தில் 1/3 பங்கு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் கீழுள்ள சுற்றுலா அபிவிருத்தி வரி நிதியத்தின் வருமானமாவதுடன், அந்த பணம் சுற்றுலா வணிகத்தின் மேம்பாடு அல்லது அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம், இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சம்மேளன பணியகம் போன்றவற்றிற்கு கிடைக்கும் பணத்தில் முறையே 70, 12, 14 மற்றும் 4 சதவீதம் படி வழங்குவதற்கு அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மேற்கூறப்பட்ட நிறுவனங்களுக்கு முறையே ரூபா 2,747,251,224, ரூபா 470,957,352, ரூபா 549,450,245 மற்றும் ரூபா 156,985,784 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 3,924,644,605 தொகைகள் வழங்கப்பட்டிருந்தன.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

--------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) பிரிவின் பிரகாரம் இங்கையிலிருந்து வெளியேறுகின்ற கப்பலில் இலங்கையிலிருந்து வெளியே செல்கின்ற பிரயாணியொருவருக்காக விநியோகிக்கப்படுகின்ற கசல பிரயாணச் சீட்டுக்களுக்கும் வரி அறவிடப்பட்டு அதன் ஒரு பகுதி அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு கப்பல் மூலம் பயணம் செய்கின்ற பிரணாயிகளிடமிருந்து வரி அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் போதுகுடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் 27565 பிரயாணிகள் வெளிநாடு சென்றிருந்தமையால் அதற்காக ஒரு பிரயாணியிடமிருந்து அமெரிக்க டொலர் 1.66 வீதம் மீளாய்வாண்டில் நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 6,406,106 தொகையான குடியகல்வு வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் 2017 ஆம்

ஆண்டின் போது இலங்கையிலிருந்து விமானம் மூலம் வெளியே சென்ற 02 வயதிற்குக் மேற்பட்ட இலங்கையினதும் வெளிநாட்டவர்களினதும் எண்ணிக்கை 3,653,370 ஆனமையால் நிதியத்திற்கு விமானம் மூலம் வெளியே சென்ற பிரயாணிகளுக்காக ரூபா 2,557,359,000 குடியகல்வு வரி வருமானம் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் குடியகல்வு வரியாக ரூபா 2,378,828,212 தொகையே அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 178,530,788 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) குடியகல்வு வரியைச் சேகரித்தல் | (i) கப்பல் மூலம் பிரயாணம் செய்கின்ற பிரயாணிகளிடமிருந்து வரி அறவிடப்படாமை.<br>(ii) விமானம் மூலம் பிரயாணம் செய்கின்ற பிரயாணிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற வரி, குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் இணங்காமை. |
| (ஆ) சுற்றுலா வரி அபிவிருத்தி வரி சேகரித்தல் | நுகர்வோர்களிடமிருந்து அறவிடப்பட்ட வரியின் அளவிற்கும் நிதியத்திற்கு அறவிடப்பட்டிருந்த வரித் தொகைக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டமை. |